# சர்வவியாபி

| 24-05-2009 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | விரோதி ஆண்டு வைகாசி 10 | வருட சந்தா ரூ. 100 |
|---|---|---|---|

| இதழ் 20 | புத்தகம் 103 | e-mail:missionpress@satyam.net.in e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருள்தந்தை S. மரிய ஜோசப் |
|---|---|---|---|---|


## புண்ணிய பூமியில் மேற்கொண்ட திருப்பயணத்தின் நினைவலைகள்.

✚ புனித பூமியில் அடியெடுத்து வைத்தவுடன், "மற்றெல்லாரையும்போல நானும் திருப்பயணியாக புனித இடங்களை தரிசிக்கவும், புனித இடங்களில் அமைதிக்காக செபிக்கவும், குறிப்பாக இப்புண்ணிய பூமியிலும், உலகிலும் அமைதி நிலவ செபிக்கவும் வந்துள்ளேன்" ("I came as a pilgrim of peace") என்று தம் பயணத்தின் இலக்கை திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் எடுத்துரைத்தார்.

✚ "*ஐந்தாவது நற்செய்தி* என்று புண்ணிய பூமி அழைக்கப்படுகிறது. ஏனெனில் இயேசு மனு உரு ஏற்ற மறையுண்மை முதல், இயேசு உயிர்த்த மறையுண்மை முடிய அனைத்தும் நிகழ்ந்த இடங்களையும், அம்மறை யுண்மைகளையும் இங்கு எதிர்கொள்ளுகிறோம்.

✚ **நாசரேத்தில்** திருக்குடும்பம் வாழ்ந்ததை தம் நினைவில் கொண்டு, திருத்தந்தை அங்கு வருகை தந்தபோது "குடும்பம் அமைதியைக் கற்றுத் தரும் ஆசான். எனவே அது சமுதாயத்தில் நிலவும் நோய்களை எல்லா மட்டங்களிலும் குணப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது" என்று கோடிட்டுக் காட்டினார்.

✚ **எருசலேம் நகரில்,** " எருசலேம் என்றால் "*அமைதியின் நகர்*" (City of peace) என்று பொருள்படும். யூதர், கிறிஸ்தவர், இசுலாமியர் ஆகிய மூன்று மதத்தினருக்கும் எருசலேம் திருத்தலமாக விளங்குகிறது. ஆனால் பல ஆண்டுகளாக இந்நகரில் வாழ்ந்தவர்களுக்கு அமைதி கிடைக்கவில்லை. எனவே அனைத்து நல்லுள்ளங் கொண்டவர்களோடு இணைந்து அமைதிக்கான வழிகளைக் கண்டடைய தீவிர முயற்சி எடுக்கக் கேட்டுக் கொள்ளு கிறேன்" என்று கூறினார்.

✚ மே 15 ஆம் நாள் புண்ணிய பூமிக்கு மேற் கொண்ட புனித பயணத்தின் இறுதிநாளில் திருத்தந்தை 16-ஆம் **பெனடிக்ட்** அவர்களுக்கு எருசலேமிலுள்ள டெல் அவிவ் விமான நிலையத்தில் இஸ்ராயேல் பிரதமர் ***ஷிமோன் பெரெஸ்*** (Shimon Peres) அவர்கள் அளித்த பிரியாவிடைக்கு பதிலளிக்கையில் திருத்தந்தை, தமது திருப்பயணத்தின் மையச் செய்தியை வலியுறுத்திக் கூறினார்.

✚ கடந்த ஒரு வாரத்தில் 29 புண்ணிய இடங்களைத் திருத்தந்தை தரிசித்து அங்கு திருஉரை, சிற்றுரை, வாழ்த்துரை, ஆசியுரை ஆகியவைகளை வழங்கினார். அவைகள் அனைத்தையும் தொகுத்து சுருக்கி வகுப்பறை மாணவர்களுக்கு ஒரு பேராசிரியர் வழங்குவது போல திருத்தந்தை 359 சொற்களில் 3 நிமிடங்களில் கொடுத்தார்.

✚ **யூத - கிறிஸ்தவ உறவு:** யூதர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்குமிடையே நிலவும் நல்லுறவைப் பற்றி திருத்தந்தை கூறினார். இஸ்ராயேல் ஜனாதிபதி மாளிகைத் தோட்டத்தில் ஒலிவக் கன்றை திருத்தந்தையும், ஜனாதிபதியும் நட்டனர். அப்போது உடன்படிக்கையின் மக்களான இஸ்ராயேலரிடமிருந்து திருச்சபையின் மக்கள் தோன்றியதை விளக்க புனித பவுலடியார் ஒலிவ மரத்தோடு ஒட்டுப் போடப்பட்டுள்ள உருவகத்தைப் பயன்படுத்துவதை திருத்தந்தை நினைவு கூர்ந்தார். அப்போது திருத்தந்தை கூறியது:

- "கத்தோலிக்கர்களும், யூதர்களும் ஒரே ஆன்மீக ஊற்றிலிருந்து ஊட்டம் பெறுகிறோம். சகோதரர்களாக வாழ வேண்டிய நமக்கு வரலாற்றில் உறவு உரசல் சில வேளைகளில் ஏற்பட்டதுண்டு.
- நாசிப்படையினரால் கொலை செய்யப்பட்ட யூதர்கள் நினைவுக்கூடத்தை (Yad Vashem) திங்கட்கிழமை சந்தித்தேன். மூன்று ஆண்டுகளுக்குமுன் ஹிட்லரின் விஷவாயுக் கிடங்கு இருந்த **ஆசுவிட்சு** (Auschwitz) என்ற இடத்தைப் பார்வையிட்டேன். அப்பாவி யூதர்கள் பலியாக்கப்பட்டதை (Holocaust) சரித்திரம் மறைக்க முடியாது.
- யூதர்களுக்கும், பாலஸ்தீனர்களுக்குமிடையே நிலவும் பகைமையையும், போரையும் நினைவு கூர்கிறேன். "நான் இஸ்ராயேலரின் நண்பனாக இருப்பதுபோல, பாலஸ்தீனர்களின் நண்பனாகவும் இருக்கிறேன். (I am a friend of the Israelis as well as a friend of the Palestinian people)
- மேலும் மிகவும் அழுத்தமான வார்த்தைகளில் இரு நாட்டினரும் போரைத் தவிர்க்கக் கேட்டுக் கொண்டார். "இனி இரத்தத்தை சிந்தாதீர்கள். இனி போர் வேண்டாம். தீவிரவாதம் வேண்டாம். வன்முறையை பிறப்பிக்கும் வன்முறையைத் தவிர்ப்போம். நீதியின் அடித்தளத்தில் நிலையான அமைதியைக் கட்டியெழுப்புவோம். உண்மை யான ஒப்புரவும், குணமும் கிட்டுவதாக."
- இஸ்ராயேல் தனி நாடாகத் திகழ உரிமை இல்லை என்பவர்களுக்கு எதிராக "அனைத்துலகும் இஸ்ராயேல் தனி சுதந்திர நாடாக இருக்கும் உரிமையை அங்கிகரிக்க வேண்டும்" என்றார். அதே வேளையில் பாலஸ்தீன் நாடும் ஒரு தனி நாடாகத் திகழவும், மாண்போடு வாழவும் உரிமை உண்டு என்பதை திருத்தந்தை வலியுறுத்தினார்.
- இஸ்ராயேல் நாட்டையும், பாலஸ்தீனத்தையும் பிரிக்கும் சுவரைப் பார்த்து திருத்தந்தை மனம் நொந்து போய், " என் திருப்பயணத்தில் நான் கண்ட வேதனையான காட்சி இந்த பிரிக்கும் சுவராகும். இப்புண்ணிய பூமியில் உள்ளவர்கள் எந்தவித பாதுகாப்புப் படையினரின்றி, பிரிக்கும் சுவரின்றி ஒற்றுமையுடனும் ஒருங்கமைவுடனும் வாழும் எதிர்காலத்தை நோக்கியிருக்கிறேன்" என்று உள்ளம் உருகக் கூறினார்.

ஆசிரியர் பேனா...

# இந்திய ஜனநாயகம் பிழைத்தது

## மதவாதம் மக்களால் புறக்கணிக்கப்பட்டது.

***நிலையான ஜனநாயக ஆட்சிக்கு உத்திரவாதம்:*** உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக பிரகடனப்படுத்தப்பட்டப் பின் சுதந்திர இந்தியாவில் முதன் முறையாக 1952 இல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியைவிட ஜனநாயகம் தான் முக்கியம் என்று முழக்கமிட்ட பண்டிட் ஜவஹர்லால் காங்கிரஸ் சார்பாக முதல் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேசிய அளவிலும், பிராந்திய அளவிலும் இருந்த ஒருங்கமைவு படிப்படியாக பின்நாட்களில் தேய்ந்து புதுப்புது மாநிலக் கட்சிகள் பிறந்தன. இதனால் எந்தவொரு தனிக்கட்சியும் நிலையான ஆட்சியை அமைப்பது குதிரைக் கொம்பாகியது. அண்மையில் நடந்து முடிந்த 15-வது மக்களவைத் தேர்தலில் 543 இடங்களில் 262 இடங்களில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (U.P.A.) வெற்றிபெற்று உதிரி கட்சிகளின் ஆதரவு இல்லாமலேயே நிலையான ஆட்சி யமைக்கும் தகுதி பெற்றுள்ளது நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

***தேசியத் தன்மைக்குக் கிடைத்த வெற்றி:*** பாரத நாடு பல இன, மொழி, மத, பண்பாடுகளைக் கொண்டது. இதன் பன்முகத்தன்மையை அனுசரித்துச் செல்லும் அரசியல் கட்சிதான் அனைவரும் எதிர்பார்க்கும் ஆட்சியைக் கொடுக்க முடியும். காங்கிரஸ் கட்சி 1984 இல் அதிக வாக்குகளைப் பெற்று ஆட்சியமைத்ததற்கும் 2009 இல் 45 விழுக்காடு வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்ததற்கும், காங்கிரஸ் இனம், மொழி, மதம் என்ற குறுகிய வட்டத்திற்குள் முடங்கிவிடாமல் தேசியத் தன்மையைத் தழுவியதுதான் முக்கிய காரணம்.

ஒருசில பிறமதத்தினர் ப.ஜ.க. அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தாலும் அது இந்துக்களுக்கு மட்டுமே உரியது என்கின்ற குறுகிய வட்டத்தைக் கடந்து வெளியே வரவில்லை. இதனால் தனது செல்வாக்கை மத்திய பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் கூட அது தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை.

ஆனால் காங்கிரசில் கூட்டணிக் கட்சிகள் இந்தத் தேர்தலில் குறைவாக இருந்தாலும் கேரளம், மத்திய பிரதேசம், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் கணிசமான வெற்றியடைந் துள்ளதும், உத்திரப் பிரதேசத்தில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளதும் (21 இடங்கள்) அபார சாதனை என்று கூற வேண்டும். வடமாநிலங்களில் காங்கிரஸ் தன் செல்வாக்கை இழந்துவிட்டது என்பது பொய்யாகிவிட்டது. எனவே இந்த வெற்றி தேசியத் தன்மைக்குக் கிடைத்த வெற்றி.

***மதச்சார்பின்மைக்குக் கிடைத்த வெற்றி:*** பா.ஜ.க போன்ற மதவாத கட்சிகள் மதத்தை மையப்படுத்தி மக்களை பிளவுபடுத்தி ஆட்சியை கைப்பற்றலாம் என்று பகல் கனவு கண்டது பொய்யாகிவிட்டது. இரத யாத்திரைகள் மூலமாகவும், 'மீண்டும் இராமர் கோவில் கட்டுவோம்' என்ற வாக்குறுதி களாலும் மக்களை ஒன்றுபடுத்த இயலவில்லை. நிலையான ஆட்சியில்லை. எனவே நிலையான ஆட்சியை தருவோம் என்ற அவர்களுடைய வாக்குறுதியை மக்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் அந்த நிலையான ஆட்சியை காங்கிரஸ் கூட்டணிதான் தரமுடியும் என்று நம்பி அவர்களுக்கே வாக்களித்துள்ளனர். பா.ஜ.க.வும் அதன் தலைவர் திரு. L.K. அத்வானியும் உணர வேண்டிய பாடம் என்னவென்றால் ***"இந்துக்கள் இந்துத்து வாவை நிராகரித்துவிட்டனர்"*** என்பதுதான் (Hinduism has rejected Hindutva- Shiv Visvanathan - Deccan Chronicle: 17-5-09) ஒரிசா மாநிலத்தில் கந்தமால் மாவட்டத்திலும், கர்நாடக மாநிலத்திலும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மதக் கலவரத்தைத் தூண்டி எழுப்பி, தங்கள் கட்சியை நிலைப்படுத்த எடுத்துக் கொண்ட முயற்சித் தோல்வி அடைந்துவிட்டது. மதவாதம், ஜாதிய வாதம், பிராந்திய வாதம், மொழி வாதம் போன்ற பல்வேறு வாதங்கள் நாட்டைப் பிடித்து உலுக்கியதெற்கெல்லாம் இத்தேர்தல் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

இத்தேர்தலில் வாக்காளர்கள் பக்குவம் அடைந்து விட்டனர். அரசியல் ஞானத்தில் வளர்ந்துவிட்டனர் என்பது தெளிவாகிறது. வேட்பாளருக்கு வாக்களித்தபின் அவர் சரியான தலைவர் அல்ல என்று கண்டு அடுத்து மாறி மாறி மற்றவருக்கு வாக்களித்துப் பார்த்துவிட்டு மக்கள் சலித்துப்போய்விட்டனர். இந்நிலையில் ஓரளவுக்கு தேசியத் தன்மையும், மதச்சார்பின்மையும், கொண்டு நாட்டு நலனுக்காக உழைக்க முன்வரும் கட்சியைத் தேடிக் கொண்டிருந்தனர். இந்தப் பின்னணியில்தான் அவர்கள் அளித்த வாக்குகள் இந்தத் தேர்தலில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

***புலியை மிரட்டிய ஆடுகள் எங்கே?:*** நமது நாட்டைப் பொறுத்தவரையில் கூட்டணி அமைத்துதான் ஆட்சியை அமைக்க முடியும் என்ற நிலை அண்மைக் காலமாக இருந்து வருகிறது. இதில் தேசியக் கட்சியோடு இணைந்திருக்கிற பிராந்தியக் கட்சிகள் பல நேரங்களில், தங்களால்தான் தேசியக் கட்சி ஆட்சியில் அமர்ந்திருக்கிறது என்று எண்ணி அளவுக் கதிகமாக அவற்றை மிரட்டுவதும் ஆளும் கட்சிக்கூட்டணியில் இருந்துகொண்டே அவர்களுக்கு எதிராக கோஷங்கள் எழுப்புவதும், அவர்கள் கொண்டு வரும் மசோதாக்களுக்கு எதிராக வாக்களிப்பதும் வாடிக்கையாகி வருகிறது. அது மட்டுமல்லாமல் தங்களுடைய ஆதரவை தீடீரென்று திரும்ப பெற்றுக் கொள்வது. இச்சூழலில் ஆளும் கட்சி நம்பிக்கைத் தீர்மானத்தில் வெற்றி பெற போராடி வருவதே பெரிய அலுவலாகி விடுகிறது. உதாரணமாக கம்யூனிஸ்ட்கள் தலைமையிலான இடதுசாரிக் கட்சிகள் காங்கிரஸ் கூட்டணியிலிருந்து திடீரென்று விலகிக் கொண்டன. அவ்வாறே தமிழகத்தில் காங்கிரஸோடும், தி.மு.க. வோடும் கூட்டணியில் அங்கம் வகித்த பா.ம.க. திடிரென்று மாநிலக் கூட்டணி யிலிருந்து விலகிக் கொண்டது. ஆனால் தேர்தல் முடியும் வரை தேசியக் கூட்டணியில் அங்கம் வகித்தது. தேர்தல் நேரத்தில் மாற்றுக் கூட்டணியில் (அ.அ.தி.மு.க.வில்) அங்கம் வகித்தது. இராஸ்ட்ரிய ஜனதா கட்சித் தலைவர் ***லாலு பிரசாத்*** காங்கிரஸ் கூட்டணியிலிருந்து விலகி லோக் ஜனசக்தி தலைவர் ***இராம் விலாஸ் பாஸ்வானோடு*** இணைந்து போட்டியிட்டு படுதோல்வியடைந்தார். இத்தகைய மாநிலக் கட்சிகள் நடத்திய ஆடுபுலி ஆட்டம் தோற்றுப் போய்விட்டது. இந்தத் தேர்தலில் ஏறத்தாழ 300 மாநில கட்சிகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. இனியாவது வாக்காளர் புகட்டிய பாடத்தை அரசியல் கட்சியினர் கற்றுக் கொள்வார்களா?

***துணிவோடு சவாலை ஆளுங்கட்சி சந்திக்கட்டும்:*** "இந்தத் தேர்தல் பா.ஜ.க.வினரின் கூட்டுத் தோல்வி" (It was a collective failiure of B.J.P.) என்று முரளிமனோகர் ஜோஷி கூறியுள்ளார். ஆளுங்கட்சியான காங்கிரஸ் கூட்டணியினுடைய வெற்றிக்கு நாம் செய்த உருக்கமான வேண்டுதல் ஒரு முக்கியமான காரணம் என்பதையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நாட்டை வாட்டி வதைக்கும் ஊழல், அநீதி, வன்முறை, பாதுகாப்பின்மை, மதவாதம் சிறுபான்மையினர், தலித்துகள், விவசாயிகள் மற்றும் பழங்குடியினர் உரிமை மறுக்கப்படுதல் போன்றவைகளை புதிய ஆட்சி துணிவோடு எதிர்கொள்ள வாழத்துகிறோம். ●

வாரச்சிந்தனை

தூய ஆவி ஞாயிறு
31-5-2009

திப.2:1-11; 1கொரி.12:3ஆ-7,12-13 (அ) கலாத்.5:16-25
யோவான்.15:26-27;16:12-15

# ஆவியின் பொழிவில் ஆற்றல் பெறுவோம்

**மையக் கருத்து:** உயிர்த்தெழுந்த அன்று மாலையே தூய ஆவியானவரை இயேசு தம் திருத்தூதர்களுக்கு வழங்கினார் என்று புனித யோவான் குறிப்பிடுகிறார். காரணம், வாழ்வு என்ற கொடையை முதலில் பெற்றவர் இயேசு. சாவின் பிடியிலிருந்து அவரை விடுவித்தது கடவுளின் ஆவியானவரே. தூய ஆவியானவரின் வல்லமை உயிர்த்த ஆண்டவரில் முழுமையாக வெளிப் படுகின்றது. இந்த உண்மையை மனத்தில் கொண்டு, இன்றைய நற்செய்திப் பகுதிக்கு விளக்கம் காண்போம்.

**1. இயேசுவில் செயல்பட்ட ஆவியின் ஆற்றல்:** தமது பொது வாழ்வின் தொடக்கத்தில் இயேசு திருமுழுக்குப் பெற்று தூய ஆவியின் ஆற்றலால் நிரப்பப்படுகின்றார் (மாற்கு. 1:8-11). அவர் தம் வாழ்நாள் முழுவதும் அந்த ஆவியின் ஆற்றலால் இயக்கப் பட்டார். இயேசு போதித்த போதும், நோயாளிகளை குணப்படுத்திய போதும், பேய்களை ஓட்டிய போதும், சீடர்களை உருவாக்கிய போதும், ஆவியின் ஆற்றலே அவருடன் முழுமை யாக இருந்து செயல்பட்டது (லூக்.4:16-21). இந்த ஆவியின் ஆற்றலை அவர் தமது உயிர்த்தெழுதலில் மிகுதியாகப் பெற்றார். அதனால் மூடியிருந்த கதவு களையும் கடந்து, தம் சீடர்கள் நடுவில் அவரால் நிற்க முடிந்தது (யோவான். 20:19). கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த அதே நாள் மாலை, இயேசு தமது சீடருக்குத் தோன்றி, உங்களுக்குச் சமாதானம் என்று வாழ்த்துவதைக் கண்ட சீடர், அச்சம் நீங்கி பெருமகிழ்வு அடை கின்றனர். உயிர்த்த இயேசு தம்மிட மிருந்த சமாதானத்தையும் மகிழ்ச்சி யையும் சீடருக்கு வழங்குகிறார். அவரிடத்தில் ஆவியின் கொடை களாகிய சமாதானமும், மகிழ்ச்சியும் நிறைவாக இருந்ததால் தான், சீடர் களுக்கு அவைகளை அவர் கொடுக்க முடிந்தது.

**2. ஆற்றல் பெறும் சீடர்கள்:** தந்தை தம்மிடம் ஒப்படைத்த நற்செய்திப் பணியை, (மீட்புப் பணியை) தூய ஆவியின் வல்லமையை இயேசு முழுமை யாகப் பெற்றிருந்ததால்தான் அவர் மீட்புப் பணியை சிறப்பாகச் செய்ய முடிந்தது. தமக்குப்பின் அக்கடமைப் பணியைத் தம் சீடர்களிடத்தில் ஒப்படைக்க இயேசு விரும்பினார். எனவே, தம்மைப் போல் அவர்களும் ஆவியின் ஆற்றலால்தான் அப்பணியைத் திறம்படச் செய்ய முடியும் என்று நன்கு உணர்ந்திருந்தார். அதனால் தான் 'உன்னதத்திலிருந்து வரும் வல்லமையை' (லூக்.24:49) அவர்களுக்கு அளிக்கின்றார்.

**அருஞ்செயல் புரிவர்:** "பிணியாளி களின் மேல் கைகளை வைப்பர். அவர் களும் நலமடைவர்" (மாற்கு. 16:18அ).

**தீமைமீது வெற்றி கொள்வர்:** "கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது" (மாற்கு.16:18அ).

**போதிக்கின்ற வல்லமை பெற்றனர்:** "தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்க ளுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர் களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்" (மத்.28:19-20).

**வல்லமையைப் பெற்றுக் கொண்டார்கள்:** பெந்தகோஸ்தே திருவிழா அன்று தூய ஆவியார் இறங்கி வந்ததால், சீடர்கள் மாபெரும் வல்லமையைப் பெற்றுக் கொண்டார்கள் (தி.தூ.ப.2:14). பல வல்ல செயல்கள் நடந்தெறின. பெரும் திரளான மக்கள் மனமாற்றமடைந்தனர். இவை யாவுமே தூய ஆவியின் செயல்பாடுகள் ஆகும்.

**3. ஆவியைப் பொழிதலும் அதிகாரம் வழங்குதலும்:**

**i) புத்துயிர் தரும் ஆவி:** நற்செய்திப் பணி ஆற்ற தேவையான வல்லமையையும், அதிகாரத்தையும் தூய ஆவியின் வழியாக இயேசு தம் சீடர் களுக்கு அளிக்கின்றார். அவர்கள் மேல் ஊதி "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" (யோவான்.20:22) என்றார். அப்போது தொடக்கத்தில் ஆண்டவராகிய கடவுள், "நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊதிய" (தொ.நூ.2:7) நிகழ்ச்சியை சீடர்கள் நினைவு கூர்ந்தனர்.

**ii) பாவத்தை மன்னிக்கும் அதிகாரம்:** இறைவனுக்கு எதிராக மானிடக்குலம் செய்த பாவத்தை இறைவனேயன்றி எந்த மனிதரும் மன்னிக்க முடியாது. ஆனால், பாவத்தை இயேசு மன்னித்தார். இயேசுவிடமிருந்து நற்செய்தியை அறிவிக்கின்ற அதிகாரத் தைப் பெற்ற சீடர்கள் நோய்களை குணமாக்கவும், பேய்களை ஓட்டவும், பாவத்தை மன்னிக்கவும் தூய ஆவி வழியாக வல்லமை பெற்றனர்.

"எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப் படும். எவருடைய பாவங்களை மன்னி யாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப் படா" (யோ.20:23). அதனால்தான், தூய ஆவியாரின் வருகைக்குப் பின் தலைமைச் சீடர் பேதுரு ஆற்றிய பேருரையில் பாவ மன்னிப்புப் பெற யூதர்களுக்கு அழைப்பு விடுக்கிறார் (தி.தூ.ப.2:38). எனவே, தூய ஆவியின் துணைகொண்டு பாவ மன்னிப்புப் பெற்று, மீட்படைவதுதான் புனிதமடைவதற்கான வழி என்பதை உலகெங்கும் அறிவிப்பதே திருத் தூதரின் பணியாகும். இவ்வாறு, ஆழ்ந்த அமைதியையும் இறைமகிழ்ச்சி யையும் மக்களுக்கு வழங்குவது திருச் சபையின் பணியாகத் துலங்குகிறது.

**4. நம்மில் தூய ஆவியின் ஆற்றல்:** நாம் பெறும் திருமுழுக்கும், உறுதிபூசுதலும் நமக்கு "பெந்தகோஸ்து" அனுபவத்தைத் தருகிறது. அதன் வழியாகப் பல்வேறு ஆற்றல்களைத் தூய ஆவி நமக்கு வழங்குகிறார்.

- சோதனையை எதிர்த்து வெற்றி பெற ஆற்றல் தருகிறார் (லூக்.4:1,2).
- செபத்தில் உறுதியாய் நிலைத் திருக்க ஆற்றல் தருகிறார் (தி.தூ.ப.2:1,4).
- திருநூலின் ஆழ்ந்த பொருள் காண ஆற்றல் தருகிறார் (தி.தூ.ப.8:29-31).
- நம் உற்றார் உறவினருடனும், பிறருடனும் நல்லுறவு கொள்ள ஆற்றல் தருகிறார் (தி.தூ.ப. 10:28).
- எனவே, இயேசுவைப் போல நாம் வாழ வேண்டுமென்றால், தூய ஆவியின் துணையால் மட்டுமே முடியும் என்பதை உணர்ந்து, அவரால் முழுமையாக நிரப்பப்பட, ஆவியின் பொழிதலுக்காக மன்றாடுவோம்.

# 20 இயேசுவோடு இப்படி ஒரு நேர்காணல்

Sr. *லில்லி மரி*, புதுச்சேரி-1.

மனிதன் வைக்கும் சோதனைக்குக் கடவுள் உட்பட வேண்டும். சோதனைக் குடுவையில் சோதிக்கப்படுவதுபோல கடவுள் சோதிக்கப்படுகிறார். நாம் போடும் நிபந்தனைகளுக்குக் கடவுள் கட்டுப் பட்டாக வேண்டும். அது அவசியம் என்று எண்ணுகிறோம். இப்படிச் சோதித்தால் எப்படி நாம் கடவுளை அறிந்துகொள்ள முடியும்? நம்முடைய சோதனைக் கூடங்களின் நிபந்தனைகள்படி ஆய்வு நடத்தி னால் கடவுளைக் காண முடியாது. நம்மைக் கடவுளுக்கு மேலாக வைத்துக் கொள்வதால் அவரை மறுதலிக்கிறோம்.

எருசலேம் ஆலய முகட்டில் இருந்துகொண்டு சிலுவையைக் காண வேண்டும். இயேசுவே நீர் ஆலயத்தின் முகட்டிலிருந்து கீழே குதிக்கவில்லை. பாதாளத்தில் இறங்கவில்லை. ஆனால் சாவின் பள்ளத்தில் இறங்கினீர். கைவிடப் பட்ட இரவில் இறங்கினீர். ஆறுதலற்ற ஆதரவற்ற நிலையில் இறங்கினீர். கடவுள் மனிதன் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாக இதைச் செய்தீர். இவ்வாறு நீர் பள்ளத்தில் விழும்போது வான தூதர்களின் கைகளில் அல்ல, உம் அன்பு நிறை தந்தையின் கைகளில் விழுந்தீர். இது திருப்பாடல் 91:12-க்கு உண்மையான அர்த்தம் கொடுக்கிறது. ஆம் ஆண்டவரே! நாங்கள் இறைச் சித்தத்தின்படி வாழ்ந்தால் என்ன துன்ப துயரங்கள் எங்களுக்கு நேர்ந்தாலும் இறுதி புகலிடத்தை இழக்க மாட்டோம். அன்புதான் உலகத்தின் அடித்தளம் என்பது எங்களுக்குத் தெரியும். அந்த அன்பு நாங்கள் எதிர்பார்ப்பவர்களிடம் இருந்து கிடைக்காவிட்டாலும் எங்களை உண்மையாகவே அன்பு செய்யும் ஒருவரை நம்பி வாழலாம். கடவுளை நாங்கள் கேட்பதைச் செய்யும் ஊழியனாகக் கருதக் கூடாது.

மூன்றாவதான இறுதியான சோதனையைச் சற்று தியானிப்போம். இதுதான் இந்தச் சோதனை வரலாற்றின் உச்ச கட்டம். சாத்தான் உம்மை ஓர் உயர்ந்த மலைமீது கொண்டு நிறுத்தினான். நிலவுலகின் மீதுள்ள அரசுகள் அனைத்தையும் அவற்றின் பெருமைகளையும் உமக்குக் காட்டினான். இது தானே மெசியாவாகிய உமது மிஷன்? பூமியிலுள்ள அரசுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து அமைதியும் நன்மையும் நிறைந்த அரசை நிலைநாட்டுவதுதானே உம் பணி? உலகம் முழுவதுக்கும் நீர் அரசராக இருக்க வேண்டும்.

கல்லை அப்பமாக மாற்றுவதில் இரு எதிர்மாறான அம்சங்கள் இருந்ததைப் பார்த்தோம். அவ்வாறே இதிலும் இருப்பதைக் காண்கிறோம். நீர் உயிர்த்தபின் உம் சீடர்களை எல்லாம் "மலை மீது" ஒன்று கூடச் செய்தீர்: "பதினொரு சீடர்களும் இயேசு தங்களுக்குப் பணித்தபடியே கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்குச் சென்றார்கள்". (மத்.28:16) அந்த மலைமீது இயேசு சொன்னார் "விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது". (மத்.28:18) இதில் இரு சிறு நுணுக்கங்கள் புதியனவாகவும் வித்தியாசமானவை யாகவும் இருக்கின்றன.

இயேசுவே! உமக்கு விண்ணி லும் மண்ணிலும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டையும் உள்ளவர்கள்தாம் உண்மையான அதிகாரமும் மீட்கும் ஆற்றலும் கொண்டவர்கள். விண்ணக அதிகாரம் இல்லாமல் மண்ணக அதிகாரம் மட்டும் உறுதியற்றது, நிலையற்றது. ஓர் அதிகாரம் விண்ணக அதிகாரத்துக் கும் கடவுளின் அதிகாரத்துக்கும் கட்டுப்பட்டிருக்கும் போதுதான் அது நல்ல அதிகாரமாக இருக்கும். இறையாசீர் பெற்ற அதிகாரம்தான் நம்பகமானது.

அடுத்து இரண்டாவது அம்சம் இடம் பெறுகிறது. இயேசுவே உமக்கு இந்த ஆற்றல் உயிர்ப் பினால் கிடைத் துள்ளது. அதாவது இதற்கு முன்னால் நீர் சிலுவை யையும் மரணத்தையும் சந்திக்க வேண்டியிருந்தது. இந்த மலைக்கு எதிராக உள்ளது கல்வாரி மலை. மனிதர்களால் இகழப்படவும் சீடர்களால் கைவிடப்படவும் துன்பங்களை அனுபவித்தீர். கிறிஸ்துவே உமது அரசு மண்ணக அரசிலிருந்தும் அதன் பெருமை களிலிருந்தும் வேறுபட்டது. மண்ணக அரசின் பகட்டும் உம் அரசின் மகத்துவத்தின் முன் மங்கலானவை. உமது அரசு தாழ்ச்சி மூலம் நிகழ்வது. உம்மைப் பின்பற்றுபவர்களிடம் இந்தத் தாழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. திருமுழுக்கைப் பெறுபவர்கள் உம் கட்டளைகளைக் கடைபிடிக்க வேண்டும். "....நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அவர் களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள்." (மத்.28:19-20).

## இவ்வாரத்தின் இறைவார்த்தை



"நான் உலகின் மீது வெற்றி கொண்டுவிட்டேன்"

- யோவான்.16:33

## திருவிவிலிய அருட்காட்சிகள்

பேராசிரியர் ச.சாமிமுத்து, திருச்சி.

### 18-ஆம் படலம்

**ஏசா, யாக்கோபைக் கொல்லத் திட்டமிடலும் தன்னைப் பாதுகாக்க யாக்கோபு தன் மாமன் இலாபானைச் சென்றடைதலும்**

**20** "மேற்கும் கிழக்கும் வடக்கும் தெற்கும்
மிடுக்குடன் நீயே பரவிச் செல்வாய்!
தோற்கா துன்னிலும் உன்வழி மரபிலும்
தோன்றிப் பலுகிடும் உன்இனம் யாவுமே!
ஆற்றொ ழுகாசி அனைத்தும் பெறுவன!
ஆண்டாண் டெல்லாம் உன்னரு கிருப்பேன்!
ஏற்றெந் நிலம்நீ ஏகினும் உனக்கு
என்றும் காவலாய் இருந்திவண் கொணர்வேன்!

*(தோற்கா-தோல்வியுறாது; ஆற்றொழுகு-ஆற்றுநீர் தொடர்ந்து செல்லுவதுபோல்)*

**21** "உனக்கே நானும் அளித்துள வாக்கை
உன்னுளம் மகிழ நிறைவேற் றுமளவும்
மனமேற் றிடுநீ, கைவிடேன்" என்றார்!
மன்னிய புகழோன் யாக்கோ பெழுந்து
கனவில் கண்டவை யாவையும் மெய்யே!
கடவுள் இவ்விடம் இருக்கிறார் நானோ
முனமே அறியா திருந்தனன் என்றே
மொய்த்திடும் அச்சம் முந்திட நின்றார்!

*(முனமே - முன்னமே, முன்பே)*

**22** **யாக்கோபின் வியப்பும் செயலும்**
இதுதிரு இறைவனின் இல்லமே யாகும்!
எத்துணை வியப்பிது விண்ணக வாயிலே
புதுவுணர் வோங்கிட, புன்மைகள் நீங்கிட,
புந்தியில் புத்தொளி பொங்கி வழிந்திடக்
கதுமெனக் கடவுளைப் பற்றிய நிறைவுடன்
காலை வரும்வரை களித்திருந் தவரே
முதுபெருந் தந்தை ஈசாக் காசிகள்
முகிழ்த்து வந்ததை மோனத்தில் கண்டார்!

*(கதுமென-விரைவாக; மோனத்தில் - மௌனத்தில்)*

**23** உதய சூரியன் உதித்திடும் முன்னர்
உவகை உந்திட யாக்கோ பெழுந்தார்;
இதய நெகிழ்வுடன் தலைக்கணை யாக
இரவெல்லாம் இருந்த கல்லினை எடுத்துப்
பதமாய் அதையே நினைவுத் தூணாய்ப்
பகலவன் காண நாட்டிய பின்னர்
அதனின் மேலே எண்ணெய் வார்த்தார்;
அகலக் கண்கள் விரித்தே பார்த்தார்!

*(பகலவன் - சூரியன்)*

தொடரும்...

*வருங்காலத் தூண்களுக்கு வாழ்க்கைச் சுவடுகள்...*

## 21. அவமானங்களை வெற்றியின் அடித்தளமாக்குங்கள்!

Dr.**பி.வனத்தையன், திண்டிவனம்.**

அவமானத்தை அவமானமாகக் கருதாமல் கிரியா ஊக்கிகளாக மாற்றிக் கொள்ளுங்கள். வெற்றி உங்கள் வசப்படும். அவமானங்களை உங்களுக்கு உடன்பாடாக மாற்றி உயர்வடைய எண்ணுங்கள்.

புத்தர் போதனை செய்து கொண்டிருந்தனர். மதத்தின் மூட நம்பிக்கைகளைச் சாடிக் கொண்டிருந்தார். கூட்டத்தில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த ஒருவனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவன் நெடுங்காலமாக அந்த மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடப்பவன்.

அவன் எழுந்து வந்து புத்தரின் முகத்தில் காரித் துப்பினான். புத்தர் சிரித்தபடி அவ்வளவுதானா? இல்லை, சொல்வதற்கு வேறெதுவும் இருக்கிறதா? என்று கேட்டார்.

துப்பியவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"நானோ.... துப்பினேன். இந்த மனிதனோ நான் ஏதோ சொல்வது போல் நினைத்துக் கொண்டு சொல்வதற்கு வேறு எதுவும் இருக்கிறதா என்று கேட்கிறானே?" என்று எண்ணினான். புத்தர் இப்படி நடப்பார் என்று அவன் எதிர் பார்க்கவில்லை. அவன் அங்கிருந்து போய்விட்டான்.

அன்று இரவு அவனால் தூங்கவே முடியவில்லை. புத்தர் நடந்து கொண்ட விதத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந் தான். நானோ அவர் முகத்தில் துப்பி அவமானப்படுத்தினேன். அவர் திருப்பித் துப்பியிருக்க வேண்டும். திட்டியிருக்க வேண்டும். அடித் திருக்க வேண்டும். ஆனால் அவர் அப்படி எதுவுமே செய்யவில்லை.

எச்சில் துப்பியதை ஓர் அவமானமாகவே எடுத்துக் கொள்ளாமல் அதை ஒரு பதிலாக எடுத்துக் கொண்டாரே! அவர் மீதா துப்பினேன். இரவு முழுவதும் அவனால் தூங்க முடியவில்லை. விடிந்ததும் முதல் வேலையாகப் புத்தரிடம் சென்றான். அவர் காலில் விழுந்து வணங்கி என்னை மன்னித்து விடுங்கள் என்று கண்ணீர் வடித்தான்.

புத்தர் 'உன்னை யார் மன்னிப்பார்?' என்று கேட்டார்.

அவன், நீங்கள்தான் மன்னிக்க வேண்டும். நேற்று உங்கள் முகத்தின் மீது துப்பியவன் நான்தான் என்றான்.

புத்தர் நீ யார் மீது துப்பினாயோ அவர் இப்போது இல்லை.

துப்பியவனும் இப்போது இல்லை. இருவரும் நேற்று இறந்து போயினர். நீயும் புது மனிதன். நானும் புது மனிதன். இப்படி இருக்க நீ யாரிடம் மன்னிப்பு கேட்பாய். நான் யாரை மன்னிப்பேன்" என்றார்.

### வருங்காலத் தூண்களே!

கல்தூண் பனித்துளிகள் கரைக்குமா?
எரிசூரியனை கருத்த மேகம் விழுங்குமா?
பவளப் பாறையினை பேரலைகள் தாக்குமா?
பாயும் நதியினை கல்லணைகள் தடுக்குமா?
குமுறும் எரிமலையை குளங்கள் குளிர்விக்குமா?
இளைஞனே!
உனக்கு ஏற்படும் அவமானங்கள்
இலட்சிய தீயை அணைக்குமா?



# மேதகு கர்தினால் D.S.லூர்துசாமி ஆண்டகை அவர்கள் கர்தினாலாக (20-05-1985) உயர்த்தப்பட்ட 25-ஆம் ஆண்டு தொடக்கம்.

## பாறையில் முளைத்து குன்றின் மேல் பயன் மிக தரும் விதை

Fr.Dr.G.**மத்தியாஸ்**, சோகனூர்.

***திறப்புரை:*** இந்த ஆண்டு மார்ச் திங்களில், மேன்மைக்குரிய சீமோன் கர்தினால் லூர்துசாமி ஆண்டகை, இந்தியாவிற்கு வருகை தந்து, மார்ச் 27 ஆம் தேதி புதுவையிலும், 28-ஆம் தேதி கல்லேரியிலும், தனது கர்தினால் நியமன வெள்ளிவிழா கொண்டாட்டத்தை முன்னதாகவே தொடங்கி வைத்து, கூட்டு திருப்பலி ஒப்புக்கொடுத்து, இறைவனுக்கு நன்றி கூறினார். உடல் நலம் மிக குன்றி இருந்த நிலையில் அமர்ந்தவாறே, பலி செலுத்தினார். இந்த இரண்டு திருப்பலிகளிலும் அருகே இருந்து பங்கேற்ற எனக்கு, இந்த கர்தினாலின் தேவ அழைத்தல் தொடக்கம், என் எண்ண அலைகளில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது. அதையே தான், இப்போது உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

***தியாக்கோன் பட்டமும் "எர்மஸ்" தட்டச்சு எந்திரமும்:*** 1966 ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 27ம் நாள், அப்போதைய பெங்களூர் துணை ஆயர், லூர்துசாமி ஆண்டகை அவர்கள், திருச்சபை சட்டம் புதுப்பித்தல் குழுவில் பங்கேற்க, உரோமையில் தங்கி இருந்தார். அன்று காலை அர்பன் கல்லூரியின் கோயிலில் எனக்கு திருத்தொண்டர் திருப்பட்டம் கொடுத்தார். அதே நாள் மாலையில் தொலைப்பேசியில் என்னை அழைத்து அவர் கூறியது, "இன்று எனக்கு மிகவும் மகிழ்ச்சியான நாள். ஏனென்றால் நான் குருவாக என் உள்ளத்தில் தேவ அழைத்தல் விதையை விதைத்தது, உன்னுடைய தந்தை கபிரியேல் ஆசிரியர் அவர்கள்தான். அவரது மகனை இன்று திருத்தொண்டராக அருள்பொழிவு செய்து எனது நன்றி கடனை அடைத்த மகிழ்ச்சி தான் இந்த மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியின் அடையாளமாக ஒரு 'எர்மஸ்' தட்டச்சு இயந்திரம் உனக்கு பரிசாக நாளை உன்னை வந்தடையும். உனக்கு என்னுடைய வாழ்த்துக்கள்". என் மகிழ்ச்சி கரை கடந்து ஓடியது. இன்றும் என்னிடம் இந்த தேவ அழைத்தலின் அப்பா-அவர்-நான் என்ற முக்கோணத்தின் அடையாளமாக இருக்கின்றது இந்த 'எர்மஸ்' தட்டச்சு இயந்திரம்.

***தந்தையின் விளக்கம்:*** எனது தந்தை இந்த தேவ அழைத்தல் விதையை லூர்துசாமிக்குள் எப்படி விதைத்தார் என்று விசாரித்த போது, அவர் கூறியது: "கல்லேரியில் இரண்டாம் வகுப்பு மாணவனாக லூர்துசாமி படித்துக் கொண்டு இருந்தார். ஒருநாள் ஆண் பிள்ளைகளை மட்டும் வரிசையாக நிற்க வைத்து, நீ படித்து விட்டு என்னவாக இருக்க ஆசைப்படுகிறாய் என்று ஒவ்வொருவரிடமாக கேட்டுக் கொண்டே வந்தேன். விவசாயி, போலிஸ், சிப்பாய், ஆசிரியர், குமாஸ்தா, என பலவித பதில்கள் கிடைக்கப் பெற்றேன். லூர்துசாமியின் முறை வந்தபோது, எதுவும் கேட்காமல், நானே, சுயமாக, நீ சாமியாராகப் போ என்று கூறினேன். இதுதான் நான் விதைத்த வித்து. அந்த வித்துதான் இந்த பாறையில் (கல்லேரியில்) விதைக்கப்பட்டு, வளர்ந்து பயன் தரும் மரமாக உருவாகி, குருவாகி, ஆயராகி, பேராயராகி, கர்தினாலாகி, (வத்திக்கான்) குன்றில் பயன் மிகு தருகின்றது. என்னே ஆச்சர்யமான ஒரு கர்தினாலின் தேவ அழைத்தல்!

***தூய ஆவியின் ஏவுதல்:*** இதுபோன்றும், இன்னும் பல்வேறு பட்ட விதங்களிலும், இந்த தேவ அழைத்தல் என்னும் விதை விதைக்கப்படுகின்றது. இது தூய ஆவியின் செயல்பாடு ஆகும். "காற்று விரும்பிய திசையில் வீசுகிறது. தூய ஆவியும் அப்படியே." (யோ.3:8) இந்த திருவசனத்தை தம்முடைய ஆயர் அருட்பொழிவு அழைப்பிதழில், கர்தினால் ஆண்டகை குறிப்பிட்டு எங்களை எல்லாம் அழைத்தார். குருவாக, ஆயராக, துணை ஆயராக, வாரிசு ஆயராக, பேராயராக, மறைபரப்பு ஆணையத்தின் இணை செயலராக, கர்தினாலாக, கீழைத் திருச்சபைகளின் தலைவராக, அவர் பணியாற்றிட, பயன் தந்திட, இந்த தூய ஆவியே அவரை ஏவி வந்தார். துணையாக நின்றார். வழி நடத்தினார். "நல்ல மரம் நல்ல கனியைக் கொடுக்குமன்றோ" (மத்.12:33).

***குறையொன்றுமில்லை:*** "ஆண்டவர் எனது நல்லாயன். ஆகவே, எனக்கொரு குறையுமிராது". (திபா.23:1) என்ற தாவீதரசரின் பாடலை மிகவும் தியானித்து, ஜெபித்து, இரசித்து, தமது குருத்துவ வாழ்வின் அடிப்படை குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார் நமது கர்தினால். குறையொன்றுமில்லை ஏனெனில், ஆண்டவர் எனது நிறைவு என்று எண்பித்து வாழ்ந்தவர். இன்றைய நாட்களில், குருத்துவ, துறவற தேவ அழைத்தலை, பல்வேறு உலக நோக்கத்திற்காக நாடுவோருக்கு, இவரது குறிக்கோள் சவால் விடுகின்றது. ஆண்டவரை உரிமை சொத்தாக கொள்ளுங்கள் குறை ஏற்படாது. ஏனெனில், ஆண்டவரே நிறைவானவர், நிறைவை தருபவர், என்று அவர் கூறிக் கொண்டே இருக்கின்றார். ஒரு திருச்சபை பணியாளருக்கு, ஒரு துறவிக்கு எல்லாம் கடவுள்தான். அவருக்கு மாற்றாக, பொன்னோ, பெண்ணோ, மண்ணோ, பட்டமோ, பதவியோ, சொத்தோ சுகமோ, தெய்வங்களானால் அது சிலை வழிபாடு ஆகும். ஆகவே தான் மறைந்த மாபெரும் திருத்தந்தை இரண்டாம் ***அருட்சின்னப்பர்*** தனது வாழ்வின் குறிக்கோளாக Totus Tuus "நான் முழுவதும் உமக்கே" என்பதை வாழ்ந்து காட்டி துன்பத்திலும், துயரத்திலும், துப்பாக்கி குண்டடி பட்டபோதும், வயது முதிர்ந்து உயிர்விடும் போதும் அதே வார்த்தைகளை உச்சரித்து இறைவனில் சங்கமம் ஆனார்.

***குறை எனக்குண்டு:*** உறவு முறையில் அவரை 'மாமா' என்று அழைக்க எனக்கு உரிமை உண்டு. ஆனால், நான் அவரை அவ்வாறு அழைத்ததும் இல்லை, அழைப்பதும் இல்லை. ஏனெனில், அவரை மாமா என்று குறுகிய உறவு வட்டத்துக்குள் வைக்க, எனக்கு விருப்பமில்லை. மாறாக, உலகம் முழுவதிற்கும் சொந்தமான திருச்சபையின் தொண்டர் (Universal Church Servant) என்றெண்ணி, எப்போதுமே அவரோடு ஆங்கிலத்தில் மட்டுமே (Your Excellency, Your Grace, Your Eminence என்று உறவாடி மகிழ்ந்திருக்கிறேன். ஏனெனில், அவர் உயர்ந்தவர், அருளாளர், மேன்மைமிக்கவர். 1971-ல் ஆகஸ்ட் திங்களில், அவர் மறைபரப்பு ஆணையத்தின் இணை செயலராக உரோமை வந்தபோது, அவரை வரவேற்று, அவருக்கென தயாரிக்கப்பட்ட உறைவிடத்தில் கொண்டு சேர்த்தபோது, நான் அவரிடம் கூறினேன்: "மூன்று போப்பாண்டவர்கள் வாழும் நகரமாகிய உரோமைக்கு பணிபுரிய வந்திருக்கிறீர்கள், வெள்ளை போப்பாண்டவர் ஆறாம் சின்னப்பர், கருப்பு போப்பாண்டவர் இயேசு சபை அதிபர் அருப்பே, சிவப்பு போப்பாண்டவர் மறை பரப்பு ஆணைய தலைவர் கர்தினால் அகஜியானியன். கண்டிப்பாக, இயேசு சபை தலைவராக நீங்கள் ஆக முடியாது. மற்ற இரண்டில் ஏதாவது ஒன்றை அடைவீர்கள் என்று ஆசிக்கிறேன்". ஆனால், இந்த ஆசை நிராசையாகிவிட்டது.

***முடிவுரை:*** ஆயினும் பாரோர் புகழும் இந்த கல்லேரி மாநாகரத்தில் (பாறையில்) விதைக்கப்பட்ட விதை, நித்திய நகரமான உரோமையின் வத்திக்கான் (குன்றில்) பயன் மிகு விளைச்சலை தந்ததற்காக பெருமைப்பட்டு, விதைக்கும், விதையின் நாயகனுக்கும், விதையின் பெற்றோருக்கும், விதைத்தவனுக்கும், உடன் வளர்த்தோருக்கும், உரமிட்டோருக்கும், நன்றி கூறிக்கொண்டே இருப்போம்.

*சிறுகதை*

# வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார் (லூக்.1:52)

தெரஸியன் மகிபன்

ஜெர்மனியில் ஹிட்லர் ஒரு பெரும் சர்வாதிகாரி யாயிருந்தான். நாசிசக் கொள்கையைப் பரப்பி உலகம் தெய்வ சிந்தனையிலிருந்து புரண்டு நடக்கப்பாடுபட்டான். 2-வது உலகப் போரின்போது எத்தனையோ இலட்சக் கணக்கான யூதர்களைச் சாகடித்தான். 2-வது உலகப் போரின் நடுநாயகனே அவன்தான். உலகத்தையே ஒரு கொடியின்கீழ் ஆள நினைத்தான். ஆனால் யுத்தத் தோல்வியால் வந்த விரக்தியினிமித்தம் அவன் வாழ்வை அவனே அழித்துக் கொண்டான். தெய்வத்திட்டத்திற்கு முரணாக நடப்போர் யாராயினும் கடவுள் அவர்களை ஒழித்துக் கட்டிவிடுவார். அன்பும் இரக்கமுமுடைய இறைவன்தான்; ஆயினும் நீதியும் நேர்மையுமுடையவர். ஆகவே கடவுள் முன்னிலையில் நாம் பணிந்தே நடக்க வேண்டும். பணிவு என்னும்போது தாழ்ச்சியைக் குறிக்கும். இத்தகைய தாழ்ச்சியின்றி சில இடங்களில் தன்னுங்காரமாய் சில தலைவர்கள் தோன்றி, தாங்கள் இருக்கும் பகுதியில் தாங்கள் தாம் தலைவர்கள்-வீரர்கள்; விண்ணையும் மண்ணையும் இணைக்கக் கூடிய வலிமையுள்ள வாய்ச்சாலகர்கள் என வீராப்போடு நடந்து, கடைசியாய் தங்களுக்கே அவமானத்தையும் தேடிக் கொள்வர், அழிவையும் தேடிக் கொள்வர்.

மானூர் என்ற ஊரில் பரஞ்சோதி என்ற பெயருடையவர் இருந்தார். அவர் 35 வயதிலேயே, அந்த ஊருக்கு தலைவ ரென்று யாரும் அவரை தேர்ந்தெடுக்காமலேயே, தான்தான் ஊருக்கு தலைவன், தளபதி என்று தம்பட்டம் அடித்தார். சுயதொழில் என்று ஏதுமில்லை. கட்டப்பஞ்சாயத்து நடத்து வதன் மூலமும் யாரும் பணவசதியுடையவர்கள் தரக்கூடிய உபகாரத்தையும் வைத்து தம் வாழ்க்கையை நடத்தி வந்தார்.

"ஏங்க, இப்படி தனக்கென்று சுயமாக ஒரு வேலை யில்லாம இருந்தா எப்பிடி பிள்ளைகளைக் காப்பாற்றுவது, உங்களையும் ஊரைச் சுரண்டி காலம் கடத்துகிறான் என்று தானே யாரும் சொல்வாங்க, ஏதாவது ஒரு வியாபாரமாவது செய்யுங்க" என்றாள் அவருடைய வாழ்க்கைப் பங்காளி பங்கஜம்.

"என்ன தொழில் செய்வது? நீ என்ன குதிர் நிறையவா பணம் கொண்டு வந்த அதை வைத்து வியாபாரம் செய்ய, அல்பசீதனம் கொடுத்தே உங்க அப்பன் உன்னைகரையேற்றி விட்டாரு; பக்கத்து ஊரில், இரு சக்கரவாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலைச் செய்தேன். உங்க அப்பன்தான் "ஊரோடு வந்திருந்து என்னுடைய நிலபுலன்களைக் கண்காணித்துக் கொள்ளுங்க" என்றார்.

"நானும் அவர் ரொம்ப விரும்புறாரே என்று ஊருக்கு வந்தேன். உன்னை கட்டிக் கொடுத்தாரு; இப்போ உன் அண்ணன் அவங்க நிலபுலன்களை நான் மேற் பார்க்கக் கூடாது என்று தகராறு செய்யுறான்; பின்ன நான் என்ன செய்து ஊருக்கு ஏதாவது நல்லது செய்யுறேன் என்று சொல்லி யாவது அப்பிடியும் இப்படியும் கிடைக்கிற தரகுக் காசை வைத்துத்தான் சீவிக்க வேண்டியதாயிருக்கு" என்றார் பரஞ்சோதி.

"கேப்பையில நெய்வடியுதுன்னு சொன்னா, கேட்பாருக்கு மதி எங்க போச்சு; நீங்க உங்க ஷாப் தொழிலைத்தான் செய்வேன்னு எங்க அப்பாகிட்ட சொல்லியிருக்க வேண்டியதுதானே?"

"உனக்காக வேண்டித்தான், வயசாகிக்கிட்டு இருக்கே ஐயோ பாவம் என்றுதான் உன்னைக் கட்ட சம்மதித்தேன். உங்க அப்பன் ரொம்ப விரும்பினதினாலே ஊரோடு வந்திருந்தேன். இப்ப என்னடான்னா, ஊருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோவில் ஆண்டின்னு சொல்லுவாங்களே, அந்த மாதிரியில உங்க அண்ணன் என்னை உதவாக்கரையினும் நெனைக்கிறான்"

"யாரும் எப்பிடியும் இருந்திட்டுப் போகட்டும், நாம சுயமரியாதையோடு நமக்குன்னு ஆதாரமான ஒரு தொழிலைச் செய்ய வேண்டியதுதான்" "சரி பார்ப்போம்" என்று சொன்னார் பரஞ்சோதி.

ஊரிலே எவனாவது வம்பு வழக்குன்னு சொன்னான்னு, அவனுக்கு ஒத்தாசை பண்ணி கோர்டு (Court) நாடுன்னு அலைஞ்சு, அவன் தருகிற சன்மானத்தை வைத்து குடும்பம் நடத்தத் திட்டமிட்டு விட்டார். அத்தோடு ஊரிலேயே கடல் தொழிலுக்குரிய உபகரணங்கள் விற்கும் கடையில் கணக்கும் எழுதினார். எப்படியோ உருண்டு புரண்டு குடும்பத்தைப் பராமரித்து வந்தார்.

ஊருக்குத் தலைவர் என்ற பட்டத்தையும் அவர் தமக்கு சூட்டிக்கொண்டதோடு நில்லாமல் அதாவது ஊர் விவகாரங்களைக் கவனிப்பதோடு நில்லாமல், அந்த ஊரிலே திருச்சபைக்குச் சொந்தமான எந்த நிறுவனத்திலும் தம்மைக் கேளாமல் எந்த மாற்றமும் ஏற்றமும் செய்யக் கூடாது என்று தன்னாதிக்கத்தோடு பேச ஆரம்பித்தார். கோயில்-பள்ளி-சுவாமியார் இல்லம்-கன்னியர் மடம்-கல்லறைத் தோட்டம்-கோயிலுக்குச் சேர்ந்த அசையாச் சொத்து-ஊர்த்திருவிழா நடபடிகள்-ஏதேனும் கட்டுமானப் பணிகள் எல்லாவற்றிலும் தாம் நினைக்கிறபடிதான் காரியங்கள் நடக்க வேண்டும் என்று சர்வாதிகாரத்தொனியில் பேச ஆரம்பித்துவிட்டார். திருச்சபை நிறுவனங்களுக்கு பங்குத்தந்தை தானே பொறுப்புள்ள தலைவர் பங்குச் சுவாமி கூட தம்மிடம் ஆலோசனை கலக்காமல் எதுவும் செய்யக்கூடாது என்று ஆணவமாகப் பேசவும் முற்பட்டார். தம் யோசனைக்கு மாறுபட்டு சுவாமியார் எதுவும் செய்தால், காலை முறிப்பேன். கையை முறிப்பேன், தோலை உரிப்பேன் என்று சொல்வதோடு அசிங்கமான வார்த்தைகளிலும் சுவாமியாரைத் தாக்க ஆரம்பித்துவிட்டார்.

நாளடைவில் அவருடைய செல்வாக்கு மறைந்து கொண்டே வந்தது. ஒருநாள் அயலூருக்குச் செய்வதற்காக பேருந்து ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்தார். ரோட்டின் ஓரமாக விரைவாக வந்த பேருந்து அவர்மீது மோதி கீழே தள்ளிவிட அவருடைய இடதுகை தனியாக முறிந்து விழுந்துவிட்டது. அங்கு நின்றவர்கள் மருத்துவமனைக்கு அவசரமாக ஆட்டோவில் கொண்டு சென்றனர். சிகிச்சை நடைபெற்றது. கை முறிந்த இடத்தில் உள்ள புண் ஆறாமல் தொல்லை கொடுத்தது. நீரிழிவு நோய் உள்ளவரென்பதால் புண் ஆறாதபடியே அவரை வாட்டி வதைத்தது.

கடைசியாய் 6 மாதமாகியும் அந்தப் புண் ஆறாமல் புரையோடி உயிருக்கே உலை வைத்துவிட்டது. செருக்குற்றோர் சிதறி விடுவர் என்று சொல்வதுபோல, குருக்களை கையை முறிப்பேன் காலை முறிப்பேன் என்று அக்கிரமமாய்ப் பேசியவருக்கு அதே கேடு வந்து அவரை மாய்த்துவிட்டது.

"நான் எவ்வளவோ சொல்லியும் என் பேச்சை உதறிவிட்டு, ஊருக்கு நல்லது செய்யுறேன் என்று சொல்லி பொல்லாப்பைத் தேடிக் கொண்டார்களே" என்று தேம்பித் தேம்பி அழுதாள் பங்கஜம். கிராமத்து மக்கள் எல்லாரும் மாறி மாறி பாசத்தோடு பங்கஜத்துக்கு ஆறுதல் கூறி, அவள் துயரைத் துடைத்தார்கள்.

இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள இயேசுவே! நாங்கள் சற்குணராய் வாழ கிருபை செய்யும்."

## பெல்லாரி ஆயரும் மீடியா இலக்குகளும்

சென்ற ஆண்டு பெல்லாரி மறைமாவட்டத்திற்கு புதிய ஆயராக மேதகு. ஹென்றி-டி-சோசா தேர்வு செய்யப்பட்டார். கடந்த பல ஆண்டுகளாக இந்திய ஆயர்கள் பேரவையின் சமூக தொடர்புத் துறையின் தேசிய செயலராக பணி செய்தவர்.

இவரது ஆயர் திருநிலைப்பாட்டிற்கு ரோமை பிரதிநிதி மற்றும் ஹாங்காங் குருக்கள், 35 ஆயர்கள், 350 குருக்கள், 400 துறவற சபைக் கன்னியர்கள் மற்றும் பொது நிலையினருடன் முன்னாள் யூனியன் தொழில்துறை அமைச்சர். ஆஸ்கார் பெர்ணாடஸ், குடியரசுத் தலைவர் பிரதிபா பட்டேலின் செயலாளர் கிறிஸ்டி பெர்ணாடஸ், உள்ளூர் பா.ஜ.க. பிரமுகர்கள் உள்பட கலந்துக் கொண்டார்கள் என்கிற செய்தி ஏசியா நியூஸில் எழுதப்பட்டிருந்தது.

தற்போது இவர் கர்நாடக மண்டலத்தின் சமூகத் தொடர்பு ஆணையத்தின் தலைவராக பொறுப்பேற்று ஆறு புதிய நோக்கங்களை முன் வைத்துள்ளார்.

1) மாநிலம் முழுதும் உள்ள மறைமாவட்ட சமூகத் தொடர்புப் பணிக்குழு செயலர் மற்றும் இயக்குநர் எல்லா குருக்களுக்கும் துறவற சபையினருக்கும் சுமார் 5 நாட்கள் மறைபரப்பு தொடர்பியல் பயிற்சி (Pastoral Communication Course) ஜூன் 2010 க்குள் வழங்கப்படும்.

2) எல்லா மறைமாவட்டத்திலுள்ள Public Relations Committee க்கு தொடர்புமுறை திறன் பயிற்சி மண்டல மையம் வழங்கப்படும்.

3) மறைமாவட்ட கல்விப் பணிக்குழுவுடன் இணைந்து 450 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள் சிறந்த ஊடக விமர்சகர்களை 2011 டிசம்பர் 31 க்குள் உருவாக்கப்படும்.

4) சுமார் 5000 இளைஞர்கள் கொண்ட இளைஞர் இயக்கத்திற்கு மாநில அளவில் ஊடக கல்வி (Media Literacy) 2011 இறுதிக்குள் வழங்கப்படும்.

5) மண்டல பணிக்குழு, மறைமாவட்ட சமூகத் தொடர்பு பணிக் குழுக்கு ஊடகம் சார்ந்த தெளிவு, அறிவுரை வழங்கிடலாம்.

6) மறைமாவட்டத்திலுள்ள 6 பங்கு தளங்களைக் கொண்ட பெற்றோர்க் குழு ஆண்டுதோறும் ஊடகம் பற்றிய சிறப்பு விமர்சனக் கண்ணோட்டத்தை வழங்கிடும் குழு அமைத்தல்.

இது போல புதிய இலக்குகளை நாமும் ஏற்று கொள்வோமா? மேதகு ஆயர் ஹென்றி கத்தோலிக்க சமூகத் தொடர்புத் துறையில் உள்ள அனுபவம் இந்திய ஆயர்கள் பேரவையின் மூலம் எல்லா மறைமாவட்டத்திற்கும் புதிய செயல்பாடாக வந்தடையும் என்பதை எதிர்பார்க்கலாம்.

அவருடன் பழகிய அனுபவத்தில்....

*திருமணி பெரியா.*
உறுப்பினர் SIGNIS, திண்டிவனம்.

## வரலாறு காணாத பயம் தந்த பன்றி காய்ச்சல்

தென் அமெரிக்காவில் உள்ள மெக்சிகோ நகரில் 220 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். அந்நகர்தான் உலகில் பரவும் கடுமையான பன்றிக் காச்சல் (Swine Flu) உருவாகுமிடமாக உள்ளது. கடந்த ஏப்ரல் மாதத்தின் நடுவில் 1400 பேர் இக்காச்சலால் பாதிக்கப்பட்டு 86 பேர் இறந்து போயினர். அரசு அதிரடி நடவடிக்கையாக அனைத்து உணவகங்கள், திரையரங்குகள், நூலகங்கள் விளையாட்டுத் திடல்கள், ஆலயக் கூட்டங்கள் அனைத்தும் மூட ஆணையிட்டது. அந்நகர் மறைமாநிலப் பேராயர் கர்தினால் மேதகு ***நார்பெர்டோ ரிவேரா*** (Norberto Rivera) அனைத்து ஆலயங்களிலும் ஏப்ரல் 26-ஆம் நாள் திருப்பலிகளை ரத்து செய்ய உத்திரவிட்டார். மேலும் அனைத்து கிறிஸ்தவர்களும் குவாதலூப் தேவ அன்னையிடம் மன்றாட ஒரு செபத்தை வெளியிட்டுள்ளார். அதில் "குவாதலூப் அன்னையே உமது மேலாடையை எம்மேல் போர்த்தி விஷக்கிருமிகளிடமிருந்து எம்மைப் பாதுகாத்தருளும்" என்று மன்றாடப் பணித்துள்ளனர்.

இந்த விஷ ஜுரம் மற்ற நாடுகளிலும் பரவி வருகிறது. திருத்தந்தை 16-ஆம் ***பெனடிக்ட்*** மே மாதம் 3-ஆம் நாள் மூவேளை செபத்திற்குப்பின் குறிப்பாக மெக்சிக்கோ நகரில் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களுக்காக தமது செபத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

## ஐந்து அருளாளர்களுக்கு புனிதர் பட்டம்

திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் ஐந்து அருளாளர்களுக்கு 26-4-2009 ஞாயிற்றுக்கிழமை புனித பேதுரு சதுக்கத்தில் புனிதர் மட்டமளித்தார். 1) அருளாளர் அருள்திரு. ஆர்க்காஞ்சலோ தாதினி (Arcangelo Tadini), இத்தாலிய குரு, நாசரேத்து புனித இல்லத்தைச் சார்ந்த பணியாளரான அருள்சகோதரிகள் சபை நிறுவுனர். 2) அருளாளர் பெர்நார்தோ தோலமி (Bernardo Tolomei) இத்தாலிய மடாதிபதி, ஒலிவெத்தி மலை கன்னிமிரி சபை நிறுவுனர். 3) அருளாளர் நுனோ தே சாந்தா மரியா அல்வாரஸ் பெரேரா (Nuno de Santa Maria Alvares Pereira) போர்த்துகல் நாட்டவர். கார்மேல் மலை அன்னையின் சபை மடத்துறவி. 4) அருளாளர் அருள்சகோதரி கெத்ரூத் கத்தரினா, இத்தாலியர். திவ்விய நற்கருணை சகோதரிகள் சபையை ஏற்படுத்தியவர். 5) அருளாளர் கத்தரினா வோல்பிசெல்லி (Caterina Volpicelli) இத்தாலிய அருள்சகோதரி. திரு இருதய பணிப்பெண்கள் உலகுசார் துறவு நிறுவனத்தை ஏற்படுத்தியவர்.

## ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வில்லியனூர், புனித லூர்தன்னை மேனிலைப் பள்ளி முதல்வர் அருள்திரு. V.சின்னப்பன் அடிகளாரின் தந்தை திரு. ***வனத்தையன்*** (வயது 93) 16-5-2009 அன்று சனிக்கிழமை இறையடி சேர்ந்தார். அவரது அடக்கம் அதே நாள் மாலை 4.00 மணிக்கு சாத்திப்பட்டு பங்கு கோவிலில் நடைபெற்ற ஆன்ம இளைப்பாற்றிக்கான கூட்டுப்பலிக்குப்பின் இடம் பெற்றது. தந்தையை இழந்து வருந்தும் அருள்தந்தை V. சின்னப்பன் அடிகளாருக்கும், அவர் குடும்பத்தினருக்கும் செபம் கலந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# புனித பவுலின் ஆண்டை முன்னிட்டு
# தூய பேதுரு விவிலிய சிறப்பு குறுக்கெழுத்து போட்டி - 70

## ஜூன் மாத வெளியீடு

அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ், தாராபுரம்.

வார்த்தை இறைவனில் வாசமுடையோர்களுக்கு

ஜெபம் நிறைந்த வாழ்த்துகள். நம் அன்பு இயேசுவின் திரு இருதயத்திற்கு ஜூன் மாதம் முழுவதும் நம்மையே நாம் ஒப்புக்கொடுப்போம். "ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசு இருந்தால் வாங்கலாம் அம்மாவை வாங்க முடியுமா? என்று கவிஞன் பாடி வைத்தான். அம்மாவை விலை கொடுத்து வாங்க முடியாது; அதேபோல் இயேசுவின் இருதயம் அன்பினால் புடை சூழப்பட்டுள்ளது. அவர் சென்ற இடமெல்லாம் நன்மை செய்து வந்தார். குறிப்பாக ஆயனில்லா ஆடுகள் போல் திரிந்த மக்கள் மீது மனம் இரங்கினார். காரணம் அவரது இயல்பில் முக்கியமானது. "அன்பு" அன்பை அடிப்படையாகக் கொண்டே மக்களை வழிநடத்தி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்தார். அவருடைய பிள்ளைகளாய் நாமும் வாழ வேண்டும். புதிய கல்வி ஆண்டு தொடங்குகிற இம்மாதத்தில் நம் வீட்டிற்கு அருகில் உள்ள ஏழைப்பிள்ளை களுக்கு கல்விக் கட்டணம், நோட்டுகள்,துணிகள், வாங்கிக் கொடுத்து அவர்களை இயேசுவின் இதயக் கருணையால் மகிழ்ச்சிப் படுத்தி என்றும் மகிழ்ச்சியாய் வாழ ஜெபத்துடன் வாழ்த்துகிறேன்.

இயேசுவின் தோழமையில்

அருட்சகோதரர் **அ.மே. ஜேம்ஸ்**

## குறிப்பு:

1. பதில்களை 30-6-2009 க்குள் அனுப்பி வைக்கவும்.
2. ஆசிரியரின் இறுதித் தீர்ப்பே முடிவானது.
3. பதிலை அதிகாரம், வசனத்துடன் சரியான முகவரியுடன் எழுதவும்.
4. குலுக்கல் முறையில் முதல் 6 நபர்களுக்கு ஜூன் மாத இறுதிக்குள் பரிசுகள் அனுப்பி வைக்கப்படும்.
5. பதில்களை இன்லெண்ட் கடிதத்தில் மட்டுமே அனுப்ப வேண்டும்.

## இடமிருந்து வலம்:

1 இப்படியாக அவர் அவர்களுக்கு..................அளித்தார்.
6. இம்முறை வாக்கு.................ஒன்றும் ஏற்படவில்லை.
8. உடனே நான்........................கூச்சலிட்டுக் கத்தினேன்.
9. நாங்கள் நேர்மையானவர்கள்...............கள் அல்ல.
14. ராகேலின் பணிப்பெண் இவள்.
16. அங்கே பொங்கி..................நீரூற்றைக் கண்டனர்.
21. யோசேப்பு தன் சகோதரர் யாவரையும்.............அழுதார்.
22. உள்ளே..................சார்ந்தவர் வேறு எவரும் இல்லை.

## வலமிருந்து இடம்:

2. அதற்கு.................நீர் சொன்னபடியே ஆகட்டும்
3. யோசேப்பின் தலைமகன் யார்?
4 ஈனும் கட்டவிழ்ந்த.....................ஆவான்.
9. கால்நடை......................அடித்து உணவு தயார் செய்.
11. என்னை.................அனுப்பியது நீங்கள் அல்ல.
19. நம் உறவினரைப் பற்றியும் துருவித்......................கேட்டார்.
20. இப்பொழுது என்னிடம்.................ஏன்? என்றார்.
23. இரகுவேலின் புதல்வர்களில் ஒருவர்.

## மேலிருந்து கீழ்:

5. ஏர் என்பவனின் மனைவி யார்?
1. இவர் செக்கேமின் தந்தை.
6. இறைவனின் இல்லம் விண்ணுலகின்....................என்றார்.
7,. உன்.....................யின் புதல்வர் உன்னை வணங்குவர்.
10. இந்த மனிதர்கள் நம்முடன்............கொள்பவர்கள்.
11. இந்த...............எவ்வளவு அச்சத்திற்குரியது.
12. எகிப்து நாட்டின்......................ஏழாண்டுகள் முடிவுற்றான.
17. கானான் நாட்டில் இறந்த பெண்மணி யார்?

## கீழிருந்து மேல்:

11. பொழுதுசாய....................வெகுநேரம் இருக்கிறது.
18. சிபயோனின் புதல்வர்களில் ஒருவர்.
15. இவர் கொள்ளைக் கூட்டத்தின் தாக்குதலுக்கு உள்ளாவான்.
18. ஒரு கொடிய......................அவனைத் தின்றுவிட்டது.
19. அவன் துயில் கலைக்கத்.....................எவன்?
23. செல்வத்திற்குமேல்........................பெற்று மாபெரும் செல்வரானார்.

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி:**

அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ்
தூய பேதுரு விவிலிய
குறுக்கெழுத்துப் போட்டி - 70
தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்
தாராபுரம் - 638 656, ஈரோடு மாவட்டம்,
செல்: 9942311068

## தொடக்க நூல் 26 முதல் 50 வரை உள்ள அதிகாரங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | | | 3 |
| | | | | 4 | 5 | ■ | 6 | 7 | |
| | 8 | | | | | | | | |
| | | 9 | | | | | | | |
| | 10 | ■ | ■ | | | | | | 11 |
| | | 12 | ■ | | | | ■ | ■ | |
| 13 | | | 14 | | 15 | | 16 | | |
| 17 | | | | 18 | | 19 | | | 20 |
| | | | 21 | | | | | | |
| | 23 | | | | ■ | ■ | | | 22 |

விண்ணக வாழ்வின்
இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 14-08-1919



மறைவு: 23-05-2007

திருமதி. A.D.L.S.

## ஆரோக்கியமரியம்மாள்

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"-யோவான்.11:25

**23-5-2009 சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு புதுவை, ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

சகோதரியின் பிரிவால் வாடும்

**திரு. கெனீல் தனராஜூபிள்ளை மற்றும் பேரன்கள், பேத்திகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**

# 45-ஆம் ஆண்டு ஞாபகம் (23-5-2009)



"புதுவை மாஜி செங்கோல் ஞானபிரகாச முதலியார் கனிஷ்ட குமாரர்"

## செங்கோல் ஆந்திரே

(Instituteur De Francois Horsclosse En Retraite)

பிறப்பு : 16-09-1893
இறப்பு : 23-05-1964

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"-யோவான்.11:25

### செபம்

சர்வ வல்லமை பொருந்திய சர்வேசுரா சுவாமி தேவரீருடைய திவ்விய குமாரனாகிய சேசுநாதர் எருசலேம் நகரத்து வீதிகள் வழியாய்த் தம்முடைய திருத்தோளிற் சிலுவை மரஞ் சுமந்து கொண்டு போகையில் சிந்தின விலை மதியாத திரு இரத்தத்தால் இரட்சித்து இவ்வுலகத்திலிருந்து தெரிந்தெடுக்கப் பட்ட உமது அடியானாகிய

### செங்கோல் ஆந்திரே

ஆத்துமத்துக்கு நித்திய இளைப் பாற்றியையும் முடிவில்லாத பிரகாசத் தையும் கட்டளையிட்டருளும். ஆமென்.

1கர். 1மங்.1திரி.

**புதுவை, புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் 23-5-2009 சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு அன்னாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக மரித்தோர் பாடல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும்.**

144, முதல் மாடி, மாதா கோவில் வீதி,புதுவை

விண்ணக வாழ்வின்
முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 26-12-1934



மறைவு: 22-05-2008

திரு. H. **லூர்துமரியநாதன் நோயல்**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"-யோவான்.11:25

**22-5-2009 வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு புதுவை, ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

பிரிவால் வாடும்

**மனைவி: மரிஸ்டெல்லா மற்றும் குடும்பத்தினர்.**

முதல் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 03-09-1930



மறைவு: 23-05-2008

Mr. Benjamin Adirubassamy

இரக்கம் மிகுந்த இயேசுவே! எங்கள் குடும்பத்தின் தெய்வமாய் திகழ்ந்து தன் வாழ்வின் கடமைகளை முடித்து விண்ணக வாழ்விற்கு சென்றுள்ள இவரின் ஆன்மாவிற்கு முடிவில்லா மீட்பையும், வாழ்வையும் அளித்து புனிதர்களின் கூட்டத்தில் அவரைச் சேர்த்தருள உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்.

23-5-2009 சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு புதுவை, ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

அன்பை நினைவு கூறும்

**மனைவி, மகன், மருமகள், மகள்கள், பேரப்பிள்ளைகள்.**

விண்ணக வாழ்வின்
இருபத்தாறாம் ஆண்டு அன்பு நினைவு

தோற்றம்: 01-09-1905



மறைவு: 30-05-1983

S. SELVARADJOU

(முன்னாள் ஆசிரியர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுச்சேரி-1)

அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப் பாற்றியையும், முடிவில்லா விண்ணக வாழ்வையும் அளித்தருளும்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகப் புதுவை ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் 30-5-2009 சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெறும் பாடல் திருப்பலியில் பங்குகொண்டு வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மகள்கள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.**



# விண்ணக வாழ்வின்
# 25-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி









**பிறப்பு**
**18-01-1926**

**இறப்பு**
**28-05-1984**

# MARCELIN MANUEL DE CONDINGUY

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" - யோவான்.11:25
என்று இறைவாக்கு அருளிய இயேசுவே

## MARCELIN MANUEL DE CONDINGUY

அவர்களை உம் வானக வீட்டில் என்றும் வாழ வரம் அருள வேண்டுகிறோம்.

- ஒரு கர்.மங்.திரி.

பிரிவால் துயருறும்

மனைவி: **CHEELA MANUEL DE CONDINGUY**
**மகன், மகள்கள், மருமகள், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள்.**

---

**நினைவுத் திருப்பலி:** 28-05-2009 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் ஆலயத்திலும், மாலை 6.00 மணிக்கு, புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்திலும் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

# செய்திகள்

❋ **திருத்தந்தையை கொலை செய்ய முயன்றவர் கிறிஸ்தவனாக விருப்பம்:** திருத்தந்தை இரண்டாம் *ஜான்பால்* அவர்களைக் கொலை செய்ய *முகமது அலி ஆக்கா* என்பவர் 13-5-1981 இல் துப்பாக்கியால் சுட்டார். ஆனால் குண்டடிப்பட்ட திருத்தந்தை தீவிர சிகிச்சைக்குப்பின் உயிர் பிழைத்தார். இத்தாலியில் சிறை வைக்கப்பட்டிருந்த முகமது ஆக்காவை 1983 இல் திருத்தந்தை சந்தித்து மன்னித்தார். தற்சமயம் அவர் செய்த வேறு கொலைக்காக துருக்கி நாட்டில் சிறை தண்டனை அனுபவித்து வருகிறார். அவர் தம் சிறை தண்டனை முடிந்து விடுதலைப் பெற்றப்பின் (அதாவது 18-1-2010 க்குப்பின்) வத்திக்கானுக்குச் சென்று அங்கு திருமுழுக்குப் பெற விருப்பம் தெரிவித்துள்ளார்.

❋ **"குடும்பங்கள் கீழ்ப்படிதலைக் கற்பிக்கும் பள்ளிக் கூடங்கள்"- திருத்தந்தை:** ஜனவரி 2009 இல் மெக்சிக்கோ நகரில் ஆறாவது அனைத்துலக குடும்பங்களின் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டுக்கு ஏற்பாடு செய்த நிர்வாகக் குழு உறுப்பினர் 85 பேர் ஏப்ரல் 23-ஆம் நாள் வத்திக்கானில் திருத்தந்தையை சந்தித்தபோது திருத்தந்தை அவர்களைப் பாராட்டி "இறைவனின் திட்டப்படி நற்செய்தியின் மதிப்பீட்டின்படி எளிமையான, மகிழ்ச்சியான, பகிர்வு உள்ள, நம்பிக்கையும் பற்றுதியும் கொண்ட கிறிஸ்தவக் குடும்பங்கள் கீழ்ப்படிதலைக் கற்றுத் தரும் பள்ளிக் கூடங்களாகத் திகழுகின்றன" என்று கோடிட்டுக் காட்டினார்.

❋ **செர்மன் மொழியில் புதிய விவிலியம் வெளியீடு:** அனைத்து கிறிஸ்தவ சபைகளும் இணைந்து விவிலியத்தை செர்மன் மொழியில் வெளியிட்டுள்ளனர். "Die Vatikan Bibel" இதன் முதல் பிரதியை ஏப்ரல் 23-ஆம் நாள் திருத்தந்தையிடம் வத்திக் கானின் ஆவணக் காப்பாளர் மேதகு கர்தினால் *ரபேல் பரினா* (Raffaele Farina) அவர்கள் அளித்தார்கள்.

❋ **உலகில் அதிரடி மாற்றத்தை ஏற்படுத்தாத 100 நாள் ஆட்சி:** அமெரிக்க ஜனாதிபதி *பராக் ஒபாமா* தமது ஆட்சியில் ஒழுக்கவியல் நீதியான அடிப்படை கொள்கைகளை கொண்டு வருவார் என்று கத்தோலிக்கத் திருச்சபை அச்சம் கொண்டிருந்தது. ஆனால் அமெரிக்க கத்தோலிக்க ஆயர்கள் அஞ்சியதுபோல திரு பராக் ஒபாமா தமது ஆட்சியில் ஒழுக்கவியல் துறையிலோ வெளி உறவுத் துறையிலோ அதிரடி மாற்றத்தை கொண்டு வராதது ஓரளவு நிம்மதியை அமெரிக்க ஆயர்களுக்கு கொடுத்துள்ளது. வத்திக்கானிலிருந்து வெளிவரும் ஏப்ரல் 29ம் நாள் தேதியிட்ட இதழ் "உலகத்தை உலுக்காத 100 நாட்கள்" என்ற தலைப்பில் மேற்கண்ட கருத்துகளை வெளியிட்டது. மேலும் அண்மையில் ஏற்படுத்திய கர்ப்பிணி பெண்கள் பாதுகாப்புச் சட்டத்தின் மூலமாக பெண்களுக்கு உதவியளிப்பதின் மூலமாக அவர்கள் கருக்கலைப்பு செய்வது தடுக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ("The 100 days that did not shake the World" - April 29, L'Osservatore Romano.)

❋ **ஸ்பெயின் நாட்டுக் குழந்தைகள் நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஈடுபட திருத்தந்தை அழைப்பு:** மே திங்கள் 2, 3 தேதிகளில் (2009) ஸ்பெயின் நாட்டில் சிறுவர்களுக்கான மறையறிவிப்பு மாநாடு நடைபெற்றது. அதில் 8 முதல் 12 வயதுக்குட்பட்ட 4500 சிறுவர்கள் பங்கேற்றனர். வத்திக்கானின் உள்துறைச் செயலர் கர்தினால் மேதகு தார்சிசியோ பெர்த்தோன் மூலமாக அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் "ஆர்வத்தோடு இயேசுவைப் பற்றி பேசுங்கள் இயேசுவின் நட்புறவில் செபத்தின் வழியாகவும், திருவருட்சாதனங்கள் மூலமாகவும் வளருங்கள். அவர் ஒருபோதும் உங்களைக் கைவிடமாட்டார். இயேசு கிறிஸ்துவை அறியாத உங்கள் தோழர்களுக்கு துணிவோடு அவரை எடுத்துக் கூறுங்கள்" என்று திருத்தந்தை கூறினார்.

❋ **இந்தியாவில் உள்ள ஏழைக் குழந்தைகள் கல்விக்காக ஸ்லம்டாக் திரைப்பட இயக்குனர் நிதி உதவி:** "ஸ்லம்டாக் மில்லியனர்" என்ற ஆங்கிலத் திரைப்படம் கடந்த ஆண்டு மும்பை மாநகரில் ஆங்கிலத் திரைப்பட இயக்குனர் டேனிபாயில் (Danny Boyle) என்பவரால் உருவாக்கப்பட்டது. அப்படத்தில் குட்டி நட்சத்திரங்களாக குடிசையில் வாழ்ந்துவரும் *ரூபினா அலி* என்ற சிறுமியும் *அசாருதின் இஸ்மாயில்* என்ற சிறுவனும் நடித்துள்ளனர். இப்படம் பல ஆஸ்கார் விருதுகளைப் பெற்றுள்ளது. அது மட்டுமல்லாமல் இதன் தயாரிப்பாளர்கள் இப்படத்தின் வழியாக பெருஞ் செல்வத்தை ஈட்டி உள்ளனர். எனவே இந்தக் குழந்தை நட்சத்திரங்களைப் போல் உள்ள ஏழைச் சிறுவர்களுக்கு கல்வி அளிக்க அறக்கட்டளை ஒன்றை நிறுவி அதற்கு 4 கோடி 50 இலட்சம் ரூபாய் வழங்கி உள்ளனர்.

❋ **ஏழ்மையை எதிர்த்துப் போராடவும் இயற்கையைப் பாதுகாக்கவும் கேரளத் திருச்சபையின் தீவிரத் திட்டம்:** ஊடகங்கள் வெளியிட்டுள்ள தகவல்படி இந்தியாவில் 1997 ஆம் ஆண்டு முதல் 150000 விவசாயிகள் கடன் தொல்லையாலும் ஏழ்மையினாலும் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதில் 11500 பேர் கேரளாவில் குறிப்பாக விவசாய மாவட்டங்களான இடுக்கியிலும் வய நாட்டிலும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதனை எதிர்கொள்ள கேரளாவில் உள்ள 29 கத்தோலிக்க மறை மாநிலங்களில் செயல்பட்டு வரும் மறைமாநில பல்நோக்கு சமூக சேவா சங்க இயக்குனர்களும் பிரதிநிதிகளும் ஏப்ரல் 27 முதல் 29 வரை மாபெரும் ஆய்வுக் கருத்தரங்கு நடத்தி 5 ஆண்டுகால தீவிர மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்கி உள்ளனர். இதன்படி சுமார் 10,00,000 ஏழைக் குடும்பங்கள் சமூக நல ஆயுள் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். 200 பங்குகளில் உணவு தானிய சேமிப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட உள்ளது. சுமார் 10,000 குறுநில விவசாயிகள் மற்றும் நடுத்தர விவசாயிகள் ஒருங்கிணைந்த விவசாயம் செய்ய உதவி அளிக்கப்படும். மேலும் நிலத்தடி நீரை உயர்த்துவதற்காக வறட்சிப் பகுதிகளில் நீர் தேக்கங்களைக் கட்டி எழுப்பவும் நீர் நிலைகளை ஏற்படுத்தி இயற்கையைப் பாதுகாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் அந்தந்த இடத்தில் வாழுகின்ற மக்களை ஈடுபடுத்தி அவர்கள் ஒத்துழைப்பைப் பெற தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.


## மணமகன் தேவை

வயது:26, படிப்பு:BTS, French Nationality.

ரோமான் கத்தோலிக்கர் (Roman Catholic)

பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் பெண்ணிற்கு மணமகன் தேவை.

தொடர்பு கொள்ள:

02 38 63 13 35 (பிரான்ஸ், தொலைபேசி எண்)


*Printed and Published by* **Rev. Fr. S. MARIA JOSEPH,** Manager, MISSION PRESS, Puducherry - 605 001.